மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

255—

துணை மின் நிலையம்

***36849—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, சித்தேரி மலைப் பகுதியில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சித்தேரி மலைப் பகுதிக்கு தற்போது 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரூர் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சித்தேரி மலைப் பகுதிக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் கீரைப்பட்டி பகுதியில் உள்ள வள்ளிமதுரை கிராமத்தில் புதிதாக 8 எம்.வி.த. திறன் கொண்ட மின்மாற்றியுடன் கூடிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க 12-வது ஐந்தாண்டுத் திட்டக்

2014 ஜூலை 25]

காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 1.63 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. அந்த நிலத்தின் மதிப்பு ரூ.9 இலட்சமாகும். நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் ஒப்புதலுக்காக கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நிருவாக அனுமதி பெறப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும். இத்துணை மின் நிலையப் பணிகள் அடுத்த நிதியாண்டில் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவுக்கு வழிகாட்டும் விதமாக தமிழ்நாட்டில் எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அத்தாணி பகுதியில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தரவு வழங்கியும் பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. எனவே இப்பணியினை விரைவாகத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தியூர் தொகுதியில் இருக்கின்ற அந்தப் பகுதிக்குப் புதியதாக 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார். அதற்கு ஆணையிடப்பட்டிருந்தால், அந்தப் பணிகளை எவ்வளவு விரைவில் செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா

அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், எலக்குளம் ஊராட்சி, படப்பாடி கிராமத்தில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப் போதுமான இடவசதி இருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்றினால் படப்பாடியைச் சுற்றியுள்ள 20 கிராமங்கள் பயன்பெறும். இதனை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நாங்குநேரி பகுதியில் 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் மட்டும் இருந்தால் போதாது. அந்தப் பகுதியில் 110/11 கி.வோ. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான மின் பளு இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த நாங்குநேரி பகுதியிலே இருக்கின்ற மக்களின் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, தேவை ஏற்படின், நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 25]

256—

வீடுகள்

***8869—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, நாகம்பட்டி அல்லது தட்டாரபட்டி ஊராட்சியில் ஏழை மக்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊராட்சியில் வீடுகள் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வருக்கெல்லாம் முதல்வர் எங்கள் அம்மா! விவசாயிகளின் நலன் காத்த ஒப்பற்ற தலைவர் எங்கள் அம்மா! தமிழகத்தின் கலங்கரை விளக்கம் எங்கள் அம்மா! ஏழைக் குழந்தைகள் எல்லோருக்கும் எழுத்தறிவு, எழுச்சி கல்வி தந்தவர் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இருண்ட தமிழகத்தை ஒளி பெறச் செய்தவர் எங்கள் அம்மா! இந்தியத் துணைக் கண்டத்தின் இரும்புப் பெண்மணி எங்கள் அம்மா! வணங்கிய கைகள் விலகுமுன் வரம் தரும் இறைவன் எங்கள் அம்மா! அம்மா திட்டம் வழங்கிய ஆற்றல்மிக்க முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே, நாங்க தெருவோரம் குடியேறத் தேவையில்லை' என்ற பாடல் வரிகளுக்கு ஒப்ப, இன்றைக்குக் கிராம ஊராட்சிகளிலெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் அளிக்கின்ற பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாக, அவர்களின் வீடு கட்டுகின்ற தேவையானது பூர்த்தி செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் சொந்த இல்லங்களிலேயே குடியிருந்து வருகிறார்கள். ஆனால், ஏழை மக்கள், நடுத்தர மக்கள் வாழக்கூடிய, வளர்ந்துவரும் வேடசந்தூர் போன்ற பேரூராட்சிகளில் வசித்துவரும் மக்களுக்கு இடத்தை வாங்கி, வீடு கட்டுவது என்பது இயலாத ஒரு காரியமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர்களும் சொந்த இடத்திலே, சொந்த மனையிலே குடியிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் குறிப்பிட்ட நாகம்பட்டி ஊராட்சி, தட்டாரபட்டி ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் நிலத்தைக் கையகப்படுத்தி, அவர்களுக்கு வீடு கட்டி வழங்கினால், நிச்சயமாக அந்தப் பகுதி மக்களுடைய சொந்த இல்லம் என்கிற கனவு நிறைவேறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் இயலாதது, முடியாதது, நடக்காதது என்று எதுவுமே இல்லாத இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது அந்த மக்களின் சொந்த வீட்டுக் கனவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் உள்ள அரசு ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதும், பொதுமக்களின் சுய நிதித் திட்டத்தின்கீழும், தவணை முறையிலும் வீடுகளைப் பொதுமக்களுக்குக் கட்டிக் கொடுப்பதும்தான் வீட்டு வசதி வாரியத்தினுடைய செயல்பாடுகள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஊராட்சிகளில் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முடியுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஊராட்சிகளில் உள்ளாட்சித் துறை மூலமாக, பசுமை வீடுகள், இந்திரா நினைவுக்

2014 ஜூலை 25]

குடியிருப்புகள் கட்டித் தரப்படுவதோடு, வருவாய்த் துறையின் மூலமாக பட்டாக்களும் வழங்கப்படுகின்றன. அதனால் வீட்டு வசதி வாரியத்தால் ஊராட்சிகளில் வீடுகள் கட்டிக் கொடுப்பது இயலாது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேடசந்தூர் பேரூராட்சியில் வீடுகள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். தமிழ்நாட்டில் இருக்கின்ற பேரூராட்சிகளில் கிட்டத்தட்ட 2.42 இலட்சம் குடிசைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 14-வது நிதிக் கமிஷனில் நிதி கேட்டிருக்கிறார்கள். அந்த நிதி கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேடசந்தூர் பேரூராட்சியில் வீடுகள் கட்டிக்கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பேரூராட்சி என்பது மிகக் குறுகலான எல்லைகளைக் கொண்டது. அந்தப் பேரூராட்சியை விட்டு வெளியே வந்தவுடன், இரண்டு ஊராட்சிகள்தான் இருக்கின்றன. அதனால்தான் நிலத்தைக் கையகப்படுத்தி அந்த ஊராட்சிப் பகுதிகளிலுள்ள அந்த மக்களுக்கு தவணை முறையில் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கோரியிருந்தேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று எதிர்காலத்தில் இதுகுறித்து பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நத்தைக்கு முதுகில் ஓடு இருக்கிறது, குருவிக்கு ஆண்டனாவில் கூடு இருக்கிறது. ஆனால், நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழைகளுக்கு வீடு என்பது எங்கே இருக்கிறது'